# அரசு மேல்நிலைப் பள்ளி மேனல்லூர் –631702

## ஜூலை மாத மாதந்திரத் தேர்வு -2024

**11 - ஆம் வகுப்பு** **(இயல் 1,2)**

**தேர்வு நேரம் :1.30 நிமிடங்கள்** **மொத்த மதிப்பெண்கள் 45**

பலவுள் தெரிக. 7×1=7

1. பாயிரம் இல்லது ———அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. தவறான இணையை தேர்வு செய்க.
   அ) மொழி+ஆளுமை - உயிர் + உயிர் ஆ) கடல்+ அலை - உயிர் + மெய்
   இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண் + வளம் - மெய் + மெய்
3. வான் பொய்த்தது —என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுக பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது.
4. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
   இ) யானைடாக்டர் - குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை
5. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்கனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) ரக்கை அங்கனம்
6. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்
7. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்
   அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே
   இ) பாப்லோ நெரூடா ஈ) ஆற்றூர் ரவிவர்மா

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி 4×2=8

8. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
9. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக
   அ) பொதுச்சிறப்பு ஆ) செங்கயல்
10. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக
   அ) வைத்தார் ஆ) ஈன்ற
11. மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
   அ) வலி, வளி, வழி
12. பிறமொழி சொற்களைத் தமிழாக்கம் செய்க
   அ) விசா ஆ) பாஸ்போர்ட்
13. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.
   அ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்து வாழ்ந்து நாடு வந்தனர்.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி 4×2=8

14. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

15. மொழி பற்றிய எர்னஸ்ட் காசிரர் கூற்றைக் குறிப்பிடுக.

16. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

17. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக

18. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக

19. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி 3×4=12

20. 'சலச வாவியில் செங்கயல் பாயும்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

21. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக

22. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

23. சு வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

24. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

எவையேனும் ஒன்றனுக்கு விடையளி 1×6=6

25. (அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 1×4=4

26. ஏடு தொடக்கி எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற வாழ்த்துகள்.